# உயர்கல்வியின் கலங்கரை விளக்கம் கலைஞர்

கல்வி என்னும் அறிவுப்பெருவெள்ளம் எளியோரின் வாசலை எட்டிவிடக்கூடாது என்பதற்காக அறிவு என்னும் பகுத்தறிவின் திறவுகோல் ஆயிரமாயிரம் ஆண்டுகளாய்ப் புனித நூல்களின் சிறைகளில் அடைப்பட்டுக்கிடந்தது. திண்ணைகளிலும், குருகுலங்களிலும் மறைபொருளாய் ஒளிவுமறைவாய் இருந்த கல்வி ஆங்கிலேயர்களின் வரவால் அனைவருக்கும் பொதுவான பொருளானது. தொடர்ந்து தென்னிந்தியர்களுக்கான உரிமைப் போர்க்குரலை ஓங்கி முழங்கிய நீதிக்கட்சியின் ஆட்சியால் பாடசாலைகள் சமத்துவக்கூடங்களாகின. கல்வி என்னும் கலங்கரைவிளக்கத்தின் வெளிச்சம் கடைக்கோடி மக்களுக்கும் தென்படத்தொடங்கியது. அனைவருக்கும் பொதுவாக்கப்பட்ட அக்கல்வி காமராசரால் ஏழை எளிய மக்களுக்கு வசமாகத் தொடங்கியது. ஆனாலும் உயர்கல்வி என்பது நலிந்த மக்களின் கனவாகவும் ஏக்கமாகவுமே தொடர்ந்தது.

தமிழர்களின் வானமாய், தமிழ்நிலம் நனைத்த வான் மழையாய் வந்து வாய்த்த முத்தமிழறிஞர் கலைஞர் கல்லூரிக் கல்வியைப் பல்கலைக்கழகக் கல்வியை, ஆராய்ச்சிக் கல்வியை விளிம்புநிலை மக்களின் அடிப்படை உரிமையாக்கினார். அதனைத் தமிழர்களுக்கான பொதுஉடைமை ஆக்கினார். தொடக்கக்கல்வி என்னும் சிம்னிவிளக்கு கலைஞரின் சட்டங்களாலும் திட்டங்களாலும் துருவ நட்சத்திரமாக மின்னத்தொடங்கியது. அந்த வெளிச்சத்தில் அறியாமையும் கல்லாமையும் வறுமையும் விடைபெற, பகுத்தறிவும் முன்னேற்றமும் தமிழ் மண்ணில் முகிழ்க்கத் தொடங்கியது.

கல்வி என்பது கற்றல், கற்பித்தல் என்னும் வகுப்பறை சார்ந்த ஒரு நிகழ்வு என்ற மரபான சிந்தனையை உடைத்தெறிந்தவர் கலைஞர். கல்வி என்பது கற்பவனின் சமூக, பொருளியல், உளவியல்சார்ந்த முழுமையானதொரு முன்னெடுப்பு என்பதனைத் தமது செயல்திட்டங்களிலும் சமூக நலத்திட்டங்களிலும் செயல்படுத்திக்காட்டியவர் கலைஞர்.


காமராசரின் காலத்தில் பாய்ச்சலாக முன்நகர்ந்த தொடக்கக்கல்வி முன்னெடுப்புகள் கலைஞர் காலத்தில் அறிவு அற்றம் காக்கும் கருவியாக, பெரும்போராக முன்னெடுக்கப்பட்டது. தமிழ்நாட்டில் தி.மு.கழகம் ஆட்சி அமைக்கும் வரையில் 35 விழுக்காடு என்ற அளவில் மட்டும் இருந்த கற்றவர்கள் விழுக்காடு 1969-71இல் 45 விழுக்காடாகவும் 1989-1991ஆம் ஆண்டுகளில் 62 விழுக்காடாகவும் 1996-2001ஆம் ஆண்டுகளில் 73.5 விழுக்காடாகவும் 2006-2011 ஆம் ஆண்டுகளில் 81 விழுக்காடாகவும் மேலேமேலே உயரத்தொடங்கியது. கலைஞரின் ஐந்தாம் முறை ஆட்சியின்போது நாற்பது ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 50 விழுக்காட்டு மக்கள் கூடுதலாகக் கல்வி அறிவு பெற்றவர்கள் என்ற நிலையை எட்டினர். கல்லாமைக்கு எதிரான கலைஞரின் இச்செயல் திட்டங்களும் சட்டங்களுமே தமிழ்நாட்டை மனிதவளக் குறியீட்டு வளர்ச்சியில் முன்னணியில் நிறுத்திவருகிறது.

தொடக்கக்கல்வி என்பது தமிழ்நாட்டில் சாத்தியப்பட்ட நிலையிலும்கூட உயர்கல்வி என்பது பலரது கனவாகவே இருந்தது. எட்டாக்கனியாக இருந்த உயர்கல்வியைச் சாமான்யர்களின் கைக்கு எட்டும் தூரத்திற்கு கொண்டு வந்து சேர்த்தவர் கலைஞர். அவர் முதலமைச்சராக இருந்த போதுதான் சமூகத்தின் விளிம்புநிலைப் பிரிவு மக்களை உயர்த்தும் இலக்கை முன்னிறுத்தி, கல்வித்துறையில் பல முக்கிய கொள்கைகளை உருவாக்கிச் செயல்படுத்தினார்.

தமிழகத்தின் அனைத்து மாவட்ட இளைஞர்களுக்கும் உயர்கல்வி கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தில் பல்கலைக்கழகங்கள் இல்லாத பகுதிகளில் புதிதாகப் பல்கலைக்கழகங்களை உருவாக்கினார். திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருநெல்வேலியில் மனோன்மணி யம் சுந்தரனார் பல்கலைக்கழகம், சேலத்தில் பெரியார் பல்கலைக்கழகம், வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம், ஆசியாவிலேயே முதன்முறையாக கால்நடை மற்றும் மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், தமிழ் இணைய கல்விக்கழகம், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்கள் கலைஞரால் உருவாக்கப்பட்டன.

இன்று இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் ஏன் உலகின் பல நாடுகளிலிருந்து மாணவர்கள் தங்களின் உயர் கல்விக்கனவை சாத்தியப்படுத்திக்கொள்வதற்குத் தமிழ்நாட்டை நோக்கிப் படையெடுத்து வருவதற்கு மிக முக்கிய காரணம் கலைஞரின் தொலைநோக்குப் பார்வையே ஆகும். இந்தியாவின் தேசிய உயர்கல்வி மாணவர் சேர்க்கை 23.1விழுக்காடு மட்டுமே, ஆனால் தமிழ்நாட்டில் 51.4 விழுக்காடு மாணவர்கள் உயர்கல்வியைப் பெற்று வருகிறார்கள். உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் இன்று வரை வேறுஎந்த மாநிலமும் எட்டிவிட முடியாத உயரத்தில் தமிழ்நாடு நிற்பதற்குக் காரணம் கலைஞரே. கலைஞர் என்னும் கலங்கரை விளக்கத்தின் அறிவுவெளிச்சம் நோக்கி எல்லாத் திசைகளிலிருந்தும் கற்றுக்கொள்ள மாணவர்களும், அத்திட்டங்களைக் கற்றுக்கொண்டு கற்றுக்கொடுக்க வல்லுநர்களும் வந்த வண்ணமுள்ளனர்.

தமிழ் நிலத்தின் பெருவெளியில் பரந்து விரிந்துள்ள ஒட்டுமொத்தமான வளர்ச்சியையும் கலைஞருக்கு முன்; கலைஞருக்குப் பின் என்று வகைப்படுத்தித்தான் பார்க்க முடியும். 1966ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் 109 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருந்தன எனினும் அவற்றில் இரண்டுமட்டுமேஅரசுக் கல்லூரிகள். 1969ஆம் ஆண்டு கலைஞர் முதலமைச்சராக அரியணை ஏறியது முதல் 1976 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மட்டும் ஆண்டுக்குப் பத்துக் கல்லூரிகள் என 68 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் புதிதாகத் தொடங்கப்பட்டன. 2010ஆம் ஆண்டில் மொத்தமாகத் தமிழ்நாட்டில் மட்டும் 587 கல்லூரிகள் உயர்கல்வி நிலையங்களாகப் பரிணமித்தன. இவற்றில் 62 கல்லூரிகள் அரசுக் கல்லூரிகளாகும். 9 பல்கலைக்கழகங்கள், 13 அரசு உதவிபெறும் கல்லூரிகள், 383 சுயநிதிக் கல்லூரிகள் எனக் கலைஞரின் உயர்கல்விக் கனவு எல்லையற்ற எல்லையாக விரிந்த வண்ணமிருந்தது. கலைஞரின் 2010ஆம் ஆண்டுக் காலகட்ட ஆட்சியில் மட்டும் 17 மருத்துவக் கல்லூரிகள், 8 சட்டக் கல்லூரிகள், 645 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் உருவாகின. இவையெல்லாம் 1966ஆம் ஆண்டு வரையில் ஒற்றைப்படையில் இருந்த கல்லூரிகளாகும். கலைஞரின் காலத்தில் உருவான கல்லூரிகள் எண்ணிக்கையைக் கவனித்தால் உயர்கல்வியில் எவ்வளவு பெரிய பாய்ச்சல் உருவாகி இருக்கிறது என்பதனை நாம் உணர்ந்தறிய இயலும். இன்றைய அறிவுசார், தொழில்சார் துறைகள் அனைத்திலும் முனைப்பு மிக்க முனைவோர்களாக நம் தமிழ் மக்கள் புகழ்வாகைச் சூடி நிற்பதற்கான விதைகள் கலைஞரின் தொலைநோக்குத்திட்டங்களால் ஊன்றப்பட்டவைகளாகும். கல்லூரிகளை அதிகரிப்பதற்கான அவரது முயற்சிகள் விளிம்புநிலைப் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள்தடையின்றி உயர்கல்வியைத் தொடர வாய்ப்பளிப்பதனை நோக்கமாகக் கொண்டிருந்தன.





முனைவர் இரா.சுப்பிரமணி
இயக்குநர்(பொ.)
முத்தமிழறிஞர் கலைஞர் ஆய்வுமையம்
பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.

மாணவர்களுக்கான உயர்கல்வி நிலையங்களையும், கல்லூரிகளையும், பல்கலைக்கழகங்களையும் நிறுவியதோடு மட்டும் கலைஞரின் உயர்கல்வித் திட்டங்கள் முற்றுப்பெறவில்லை. உயர்கல்வி பயிலவரும் ஏழை எளிய மாணவர்களுக்கான பல அரிதினும் அரிதான சமூகநலத் திட்டங்களை அவர் தொடர்ந்து செயலாக்கிய வண்ணமிருந்தார். கலைஞர் ஆட்சிக்காலத்தில்தான் பொறியியல் கல்லூரி சேர்க்கைக்கான குறைந்தபட்ச மதிப்பெண் குறைக்கப்பட்டது. அதிக மாணவர்கள் தொழில்முறைப் படிப்பைத் தொடரவும், உயர்கல்விக்கான அணுகலை அதிகரிக்கவும்அத்திட்டம் பெரிதும் துணைநின்றது. கிராமப்புற மாணவர்களின் சமூக பொருளியல் நிலையை மட்டுமல்ல அவர்களின் உளவியலையும் நம்பிக்கை உணர்வையும் கைப்பிடித்துத் தூக்கிவிடும் திட்டமாக அத்திட்டம்அமைந்தது.

1968ஆம் ஆண்டில் கல்லூரி முதலாமாண்டு மாணவர்களுக்கு மட்டும் என்றிருந்த இலவசக் கல்வி என்பதனை விரிவாக்கி அனைத்து மாணவர்களுக்கும் பொதுவாக்கினார் கலைஞர். அதேபோல் கிராமங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்களை உயர்கல்வி சென்றடைவதனை உறுதி செய்யும்வகையில் ‘பட்டப்படிப்பு வரை இலவசம்’ என அறிவித்துக் கல்வியில் பெரும் புரட்சி செய்த அரசு கலைஞர் தலைமையிலான அரசே. மேலும் மாணவர் இடைநிற்றல் கூடாது என்பதற்காக இலவசப்பேருந்துப்பயணச் சலுகை மாணவர்களுக்கு வழங்கப்பட்டதோடு, கல்வி வாய்ப்புகளை மேலும் விரிவுபடுத்தக் கிராமங்களிலும் புதிதாகக் கல்லூரிகள் நிறுவப்பட்டன.

தமிழ்நாட்டின் கடைக்கோடி மாணவருக்கும் உயர்கல்வியைச் சாத்தியமாக்க எத்தனை பாதைகள் தென்பட்டனவோ அத்தனைப் பாதைகளையும் திறந்துவைத்தவர் கலைஞர். தொழிற்கல்லூரிகளில் சேரும் முதல் தலைமுறை மாணவர்களுக்கு 20ஆயிரம் ரூபாய் கல்விக் கட்டணத்தைத் தள்ளுபடி செய்தார் கலைஞர். அத்திட்டத்தை அவர் செயல்படுத்த முனைந்தபோது அதற்கு எதிர்ப்புகளும் எழுந்தன. ஆனால் அத்திட்டம் செயல்படுத்தப்பட்ட முதல் ஆண்டிலேயே 67,405 மாணவர்களும், இரண்டாம் ஆண்டில் 10,750 மாணவர்களும் பயனடைந்தனர்.

மாணவர்களைக் கல்லூரிகளுக்குள் கொண்டு வருவதற்கான கள அளவிலான தேவைகள் என்னென்ன என்பதனை ஆய்ந்தறிந்து அவற்றைக் களையும் செயல்திட்டங்களை உருவாக்கிய கலைஞர் பட்டியலின, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகைகளை இரட்டிப்பாக்கி, மாணவர்களுக்கான இலவச பஸ் பாஸ்களையும் அறிமுகப்படுத்தினார்.

தமிழ்நாட்டில் மருத்துவத் துறையின் வளர்ச்சியும் தனிச்சிறப்பும் இன்றியமையாதது ஆகும். இந்தியாவில் அதிக மருத்துவக்கல்லூரிகளைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதற்குக் கலைஞரின் தொலைநோக்குப் பார்வையே முதன்மைக் காரணமாகும். அவரது ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டில் விழுப்புரம், திருவாரூர், சிவகங்கை, பெரம்பலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கினார். ஒவ்வொரு மாவட்டத்திலும் தரமான மருத்துவக்கல்லூரியை உருவாக்குவதும் மக்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை அளிப்பதும் ‘மாவட்டந்தோறும் ஒரு மருத்துவக்கல்லூரி’ என்னும் அத்திட்டத்தின் நோக்கங்களாக இருந்தன.

எந்தச் செயல்முறையானாலும் கலைஞரின் வளர்ச்சித் திட்டங்களில் பெண்களுக்குத் தனியே ஓர் சிறப்பிடம் உண்டு. உயர்கல்வியில் மகளிருக்கான பல சிறப்புத்திட்டங்கள் வகுத்தவர் கலைஞர். பெண்கல்வியே நாட்டின் முன்னேற்றத்திற்கான அடித்தளம் என்பதை உணர்ந்த கலைஞர், பெண் குழந்தைகளின் நலன்காக்க ஈ.வெ.ரா.நாகம்மையார் இலவச பட்டப்படிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். கிராமப்புறப் பெண்கள் பயன்பெறும்வண்ணம் அமைந்த தொழில்கல்வி வாய்ப்புகள் கலைஞர் ஆட்சியில்தான் உருவாக்கப்பட்டன. அதேபோல ஒரு கோடி ரூபாய் செலவில், பட்டியலினப் பெண்களுக்கு விமானப் பணிப்பெண் பயிற்சி வழங்கும் திட்டம் 2009ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது.

ஏழைப் பெண்கள் கல்வி மற்றும் பொருளாதாரத்தில் உயரவேண்டும் என்ற எண்ணத்திலும், அவர்கள் கட்டாயம் குறைந்தபட்ச கல்வி அறிவை பெறவேண்டும் என்ற எண்ணத்திலும், எட்டாம் வகுப்புவரை பெண்கள் படித்திருந்தால் அவர்களின் திருமணத்தின்போது நிதியுதவி வழங்கும் மூவலூர் இராமாமிர்தம் நினைவு திருமண உதவித்திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இத்திட்டம் மூலம் தற்போது வரை இலட்சக்கணக்கான பெண்கள் பயனடைந்துவருகின்றனர்.

தமிழ்நாட்டில் கலைஞரின் திட்டங்களாலும் சட்டங்களாலும் உயர்கல்விக்கான வாய்ப்புகள் பெருகின. ஆதரவற்ற பெண்களின் கல்விநிலையை மேம்படுத்தும் வகையில், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண உதவித்திட்டத்தை அறிமுகப்படுத்தினார். பட்டியலினக் குழந்தைகளுக்கு உண்டு உறைவிடப் பள்ளிகள் அமைத்தது போல, மதச்சிறுபான்மையினர் என்ற அடிப்படையில் இசுலாமியப் பெண்களுக்கான தனிவிடுதிகளை அமைத்துக்கொடுத்தார். இதன்மூலம், இசுலாமியப் பெண் குழந்தைகளின் கல்வியை உறுதிப்படுத்தினார். பெண்களுக்கான அரசுப் பள்ளிகளில், பெண் ஆசிரியர்கள் கூடுதலாக பணியமர்த்தப்பட வேண்டும் என்ற அரசாணையையும் கொண்டுவந்தார் கலைஞர்.

கல்வி நிலையங்களைக் கட்டமைப்பதில் மட்டும் நிறைவடையாத கலைஞர் அங்குக்கற்பிக்கப்படும் கல்வி தரமானதாக இருக்கவேண்டும் என்பதில் மிகக் கவனமாக இருந்தார். தமிழ்நாடு பாடநூல் கழகம் வழியாகத் தரமான பாடநூல்களை உருவாக்கவைத்தார். செயல்வழிக் கற்றல் எனக் கற்பித்தல் அணுகுமுறைகளில் மாற்றங்களைப் புகுத்தினார். சமமற்ற சமூகக் களத்தில் சமச்சீரான கல்வி இருக்க வேண்டும் என்ற கலைஞரின் செயல்திட்டம் இந்திய அளவில் அதுவரை எவரும் சிந்திக்காத செயல்திட்டமாகும். சமூகத்தின் உளவியலை உள்வாங்கிக் கொண்டே கல்விக்கான பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்படவேண்டும் என்பதில் கலைஞர் உறுதியான முன்னெடுப்புகளைச் செய்தார்.

தகவல்தொழில்நுட்ப வளர்ச்சியை முன்கணித்த கலைஞர் 1999ஆம் ஆண்டே கணினிப் பாடங்களை அறிமுகப்படுத்த உத்தரவிட்டார். 2007ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளிகளில் 1880 கணினிக்கூடங்களை அமைக்க நிதி ஒதுக்கினார். கலைஞர், 1969ஆம் ஆண்டில் பாடநூல் வாரியத்தலைவராக இருந்தபோதுதான் ‘கம்ப்யூட்டரும் அதன் பயன்களும்’ என்பன போன்ற தலைப்பிலான நூல்கள் தமிழில் உருவாக்கப்பட்டன. 1963ஆம் ஆண்டே கான்பூர் ஐஐடி கணினிப் பாடத்தை அறிமுகப்படுத்தியது எனினும் கணினி தொடர்பான பாடங்கள் சென்னை ஐஐடியில் 1970ஆம் ஆண்டுதான் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால் தமிழ்நாட்டில் அதற்கு முன்பாகவே 1969 ஆம் ஆண்டே கணினிப் பாடநூல்கள் தமிழில் வெளிக்கொணரப்பட்டன.

இன்றைக்கு அமெரிக்கா உள்ளிட்ட உலகின் முன்னணி நாடுகளில் கணினி உலகைத் தமிழன் ஆண்டுகொண்டிருப்பதற்கு யார் மூலகாரணம் என்பதனை விளக்கமாகக் கூறத்தேவையில்லை. இன்றைக்கு உலகை ஆட்டிப்படைக்கும் கணினித் தொழில்நுட்பத்தை அரை நூற்றாண்டுகளுக்கு முன்பே ஒரு பாடமாகக் கலைஞர் அறிமுகப்படுத்தியிருப்பதனை நோக்குகையில் அவர் இத்தமிழ்ச் சமூகத்தை எவ்வளவு உயரம் முடியுமோ அவ்வளவு உயரம் கொண்டுசெல்ல ஓயாமல் உழைத்தார் என்பது புலனாகிறது. அந்த உழைப்பின் பலன் இன்று பெரும் விளைச்சலாகத் தமிழ்நாட்டை வாழ்வித்துவருகிறது.

சத்துணவில் முட்டை, சமச்சீர்க் கல்வி, ஒற்றைச்சாளர முறை மாணவர் சேர்க்கை, நுழைவுத் தேர்வு இரத்து, தொழிற்கல்வியில் கிராமப்புற மாணவர்களுக்கு 15 விழுக்காடு இடஒதுக்கீடு எனக் கலைஞர் கொண்டுவந்த கல்வித் திட்டங்கள் முழுக்க முழுக்கச் சமூக வளர்ச்சி என்னும் ஒற்றைப்புள்ளியில் சுற்றி வருவதனைக் காணலாம்.

கலைஞரின் கல்வி முன்னெடுப்புகளைக் கல்வியியலாளர் பாவ்லோ பிரையர் சொன்ன “எழுதப்படிக்கமட்டும்கற்றுக் கொடுப்பது கல்வியல்ல. வெறும் மனப்பாடத்திறமையில் தகவல் தொகுப்பாகக் குழந்தைகளை மாற்றுவது கல்வியின் பணியல்ல. மாறாக, ஒட்டுமொத்த சமூகத்தின் அனைத்துஅம்சங்களையும்விருப்பு வெறுப்பின்றி விசாரணை செய்வதும், சமூக அநீதியைக்களைவதும், ஒரு சிலர் மட்டும் அனுபவிக்கும்முறையற்ற செல்வப் பகிர்வை உலகில் உள்ள அனைவருக்கும் பயனுடையதாகமாற்றுவதுமே கல்வியின்நோக்கமாக இருக்கவேண்டும்!”என்ற கூற்றுடன் ஒப்பு நோக்கினால் கல்வி வெளிச்சம் ஒளிமிக்க விடியலைத் தமிழ்நாட்டில் எங்ஙனம் சாத்தியப்படுத்தியது என்பதனை அறியலாம்.

கலைஞர் கொண்டுவந்த இடஒதுக்கீடு என்பது கல்வித் துறையில் குறிப்பாக உயர்கல்வியின் அடிப்படைக் கட்டமைப்பிலேயே பெரும் மாற்றத்தை உருவாக்கியது. சமூகத்தின் பண்பியல் மாற்றத்திற்கு அடித்தளமிட்ட இந்த இடஒதுக்கீடு கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் சமூகத்தில் பின்தங்கிய ஏழை எளிய மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்பை உறுதிசெய்தது. பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு என்ற விவாதங்கள் நடைபெற்று வந்த நிலையில் சமூக அடிப்படையில் இடஒதுக்கீடு என்பதனை அமல்படுத்திக்காட்டியது தமிழ்நாடு. நீதிக்கட்சியின் நீட்சியாகக் கலைஞர் கொண்டுவந்த இடஒதுக்கீடும் உள் ஒதுக்கீடுகளும் உயர்கல்வியின்அடிப்படைக் கட்டமைப்பில் மாற்றங்களை உருவாக்கியது.

**‘உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே’ எனக் கற்கும் மாணாக்கர்கள் ஆசான்களுக்குப் பொருள் தந்தாவது கற்க வேண்டுமென்று அன்றைய மன்னன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் அறிவுறுத்தினார். ஆனால் ஆரியத்தை வென்ற நம் மன்னர்களின் மன்னர் கலைஞரோ கண்மணிகளே கல்வி கற்க வாருங்கள் கல்வியும் தருகிறேன், அதற்கான காசும் நானே தருகிறேன் எனத் தமிழ்நாட்டுக் கல்வி வரலாற்றின் புதிய அத்தியாயத்தைத் தொடங்கிவைத்தார். கலைஞர் தொடங்கிய அப்புதிய அத்தியாயம் இன்று இல்லம் தேடிக்கல்வியாகவும் புதுமைப் பெண்ணாகவும் திறன் மேம்பாட்டுப்பயிற்சியாகவும் நான் முதல்வன் திட்டமாகவும் பரிணமித்து வருகிறது. எல்லா நலமும் ஈந்திடும் கல்வியில் மிகச்சிறந்த நாடு தமிழ்நாடு என்ற வரலாற்றுப் பேருண்மையை உலக நாடுகள் உரக்கச் சொல்லும் நாள் நெடுந்தொலைவில் இல்லை.**



## மனோன்மணியத்தின் ஒப்பிலா வரிகள் !

**“இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?”**
**“தம்பியுடையான் படைக்கஞ்சான்!”**
ஒப்பிலா வரிகள் உரைத்திடும் பனுவல்
மனோன்மணியம் எனினும் - நம்
மனத்தில் பதித்தவர் அண்ணா வன்றோ!

**- கலைஞர்**